# 4 துன்புறும் பணியாளர்

துன்புறும் பணியாளன் இயேசுவில் எமது வாழ்வை வலுப்படுத்திக் கொள்வது எமது எதிர்பார்ப்பு ஆகும். அதற்கு உத்தியாக திருவிவிலியத்தில் பல்வேறு துன்பங்கள் மத்தியில் வாழ்ந்தவர்கள், துன்புறும் பணியாளன் குறித்து இறைவாக்கினர் எசாயாவின் போதனைகள், எமது நடைமுறை வாழ்வின் சவால்கள் என்பவற்றை இப்பாடத்தில் அறிந்துக் கொள்வோம்.

**யோபு 1, எரேமியா 38:1-13, எசாயா 42:1-4**

**உரையாடல் (யோபு 1, எரேமியா 38:1-13)**

ஆசிரியர் : இன்று கடவுள் நம்பிக்கை நிமித்தம் துன்புற்ற அனேகருள் யோபு மற்றும் எரேமியா என்பவர்களைக் குறித்து கலந்து ரையாடுவோம்.

தயாளன் : யோபுவின் கதையை கேட்க ஆசையாக இருக்கின்றது.

ஆசிரியர் : நாம் யோபு முதலாம் அதிகாரத்தை திருவிவிலியத்தில் திருப்புவோம்.

**வாசித்துப் பார்ப்போம்**

**யோபு 1:**

ஆசிரியர் : மேற்படி திருவிவிலியப் பகுதியிலிருந்து இறைவன் யோபுவின் இறை நம்பிக்கை உறுதியானது என அறிந்திருந்தார்.

பவன் : அப்படியானால் யோபுவுக்கு அநேக துன்பங்கள் ஏன் ஏற் பட்டன?

ஆசிரியர் : நான் விளக்கமாகக் கூறுகின்றேன். ஆண்டவர் யோபுவின் நம்பிக்கையின் பலத்தை நன்கு அறிந்திருந்தார். அவர் மனைவி, பிள்ளைகள், பணியாளர், ஆடுகள், ஒட்டகங்கள், உடைமைகள், பிள்ளைகள் அனைத்தையும் இழந்தார். ஆனா லும் அவர் இறைபற்றின் நம்பிக்கையில் உறுதியாக இருந்தார்.

இலவச விநியோகத்திற்காக

| | | |
|---|---|---|
| கீதா | : | ஆமாம். யோபு அலகைக்கு கீழ்ப்படியவில்லை. இது புதுமை அல்லவா? |
| ஆசிரியர் | : | ஆம். யோபு அலகைக்கு கீழ்ப்படியவில்லை. அவரது உடல் முழு வதும் புண்கள் தோன்றின. ஆனாலும் அவர் இறைவனைக் குறை கூறவில்லை. |
| தயாளன் | : | என்ன புதுமை? பல துன்பங்களின் மத்தியில், அனைத்தையும் இழந்த நிலையில் யோபுவின் நம்பிக்கையில் குறை ஏற்படாதது ஆச்சரியம் தான். |
| ஆசிரியர் | : | அலகை அவரை சோதிக்கச் சோதிக்க, அவர் மேலும் மேலும் இறைவனை நெருங்கினார். அனைத்து சோதனைகளிலும் அவரது நம்பிக்கைக்கு இடையூறு ஏற்படவில்லை. |
| பவன் | : | இது புதுமை நிறைந்த நம்பிக்கை! |
| ஆசிரியர் | : | இப்போது நாம் எரேமியா என்பவரைப்பற்றி கலந்துரையாடு வோம். |

**வாசித்துப் பார்ப்போம்**

**எரேமியா 33 ஆம் அதிகாரம்**

| | | |
|---|---|---|
| ஆசிரியர் | : | தயாளன் வாசித்த பகுதியின் விபரத்தை கூறுங்கள். |
| தயாளன் | : | இது பபிலோனிய பேரரசால் யூத அரசுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்ட காலகட்டத்தில் இடம்பெற்ற நிகழ்வாகும். எரேமியா இறைவார்த்தையை யூத மக்களுக்கு அறிவித்தார். |
| ஆசிரியர் | : | நல்லது. திருவிவிலியப் பகுதியை நன்கு அவதானித்து இருக் கின்றீர்கள். |
| கீதா | : | எரேமியா யூத மக்களுக்கு வழங்கிய செய்தி என்ன? |
| ஆசிரியர் | : | அவர் இறைவாக்குரைத்தார். யூத மக்களை பாபிலோனி யாவுக்கு அழைத்துச் செல்லுங்கள் எனக் கூறிய போது நிகழ்ந்தது என்ன என்பதைப் பவன் கூறுங்கள். |

பவன் : ஏரேமியா இறைவாக்குனர் யூத பேரரசனால் பெரிய சிறைக் கூடத்தில், சேறு நிரம்பிய பாழுங் கிணற்றில் போடப்பட்டு, உணவின்றி பல நாட்கள் இருந்தார். பின்னர் அரசனின் செய்தி கிடைத்தவுடன் அவரை கிணற்றிலிருந்து தூக்கி எடுத்தார்கள். அவர் மரணத்திலிருந்து காப்பாற்றப்பட்டார்.

ஆசிரியர் : சரி. அது உண்மை. இறைவனின் விருப்பத்துக்கு ஏற்ப செயற் படும்போது எம்மால் தாங்க முடியாத துன்பங்களையும் வேதனைகளையும் எதிர்நோக்க வேண்டிய நிலை ஏற்படும் என இந் நிகழ்வின் ஊடாக நாம் அறிந்து கொள்ள முடியும். ஆனால் நாம் இறை நம்பிக்கையில் நிலையாக வாழும்போது இறைவன் எல்லா துன்ப வேளைகளிலும் எம்முடன் இருக் கின்றார் என்பது தெளிவாகும்.

## துன்புறும் பணியாளன் (எசாயா 53:12,42:1-4)

யூத மக்கள் மெசியாவின் வருகையை எதிர்பார்த்திருந்தனர். அவர்கள் மெசியா எனும் அருட்பொழிவு பெற்றவரை அரசியல் நோக்கில் அரசனாக எதிர்பார்த்தனர். தாவீது அரசனின் பண்புகள் மற்றும் ஆற்றல் போன்றவற்றை மெசியாவிலும் எதிர்பார்த்தனர். இருப்பினும் இறைவாக்கினர் எசாயா மக்களின் எதிர்பார்ப்புக்களுக்கு எதிராக இறை வாக்குரைத்தார்.

புகழ் மற்றும் அதிகாரம் என்பனவற்றுக்குப் பதிலாக பணிவு, பொறுமை, துன்பங்களைச் சகித்தல் போன்ற சில பண்புகளை உடையவராக இறை வாக்கினர் எசாயா தமது இறைவாக்குகளில் தனது கருத்துக்களை வெளிப்படுத்தினார்.

எமது திருவிவிலியப் பகுதிகள் இரண்டிலும் துன்புறும் பணியாளரின் கருத்துக்களை நோக்குவோம்.

- அவர் ஆண்டவரின் ஆவியைப் பெற்றவர். (எசாயா 42:1)
- அதிகார ஆளுமைத் தொனியைவிட மென்மை குரலுடையவர். (எசாயா 42:2)
- துயருற்றவர்களை மீண்டும் துன்புற விடமாட்டார். (எசாயா 42:3)
- நீதியை நிலைநாட்டும்வரை மனம் தளராது நீதி நெறிக்காகச் செயற்படுவார். (எசாயா 42:4)
- நாம் பார்ப்பதற்கு அழகிய அமைப்போ விரும்பத்தக்க தோற்றமோ அவருக்கு இல்லை. (எசாயா 50:2)
- வேதனையுற்ற மனிதராகக் காணப்படுவார். (எசாயா 53:3)
- நம் துன்பங்களை சுமந்து கொண்டார். (எசாயா 53:3)
- அவர் தம் காயங்களால் நாம் குணமடைகின்றோம். (எசாயா 53:5)
- அவர் தம் உயிரை மானிடரின் குற்றங்களை நீக்கும் பலியாகத் தந்தார். (எசாயா 53:10)
- பலரின் பாவத்தைச் சுமந்தார். கொடியோருக்காகப் பரிந்து பேசினார். (எசாயா 53:12)

மேற்படி அனைத்து பண்புகளும் மெசியாவின் அதாவது கிறிஸ்துவின் துன்புறுதல் தொடர்பான இறைவாக்குகள் என்பது தெளிவாகின்றது.



**துன்புறும் பணியாளராகிய இயேசு**

எசாயா நூலில் கூறப்பட்டுள்ள துன் புறும் பணியாளன் மெசியா உரு வகத்தில் உண்மைத் தன்மையை வெளிப்படுத்துகின்றார். துன்புறும் பணியாளரின் பொறுப்பு இயேசுவில் நிறைவு பெறுகின்றது என்பதற்கு புதிய ஏற்பாடு சான்று பகர்கின்றது.

'அவர் தம் பிணிகளைத் தாங்கிக் கொண்டார். நம் துன்பங்களைச் சுமந்து கொண் டார்' என்று இறைவாக்கினர் எசாயா உரைத்தது மத்தேயு 8:17 இல் நிறைவேறியது. இதில் விபரிக்கப்படும் துன்புறும் பணியாளன், இயேசு, இறைசித்தத்துக்கு ஏற்ப உண்மையாகவே துன்புற்று சிலுவை மரணத்துக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டார் என நற்செய்தி நூல்கள் எமக்கு வெளிப்படுத்துகின்றன. துன்புறுதலின் விளைவானது அவரது வெற்றிகரமான உயிர்ப்பு ஆகும். இவற்றிலிருந்து கிறிஸ்து துன்புறும் பணியாளனாக இறைவிருப்பத்துக்கு தம்மை ஒப்புக்கொடுத்து தனது வேதனைகளை கருத்தில் கொள்ளாது பின்னடையாது முழு உலகுக்காக தனது உயிரை அர்ப்பணித்தார்.

## துன்புறும் பணியாளர் இயேசுவும் நாமும்

துன்புறும் பணியாளரின் பொறுப்பு எமக்கு இரு விதமான பயன்களைத் தருகின்றன.

- அவரது துன்பங்களால் எமக்கு விடுதலையும் ஆறுதலும் கிடைத்தமையால் நாம் நம்பிக்கையோடு அவருடன் இணைந்து செயற்பட வேண்டும். அப்போது அவரது துன்புறுதலின் முழுமையான நல்வினைப் பயன் எமக்குக் கிடைக்கும்.

- தன்னலம் துறந்து பொதுநலப் பணியில் ஈடுபடுவதில் சிலுவை வழியைப் பின்பற்றி நாமும் இயேசுவின் வாழ்வின் முன்மாதிரியை ஏற்று செயற்படுவோம். உலகில் ஏற்படும் பல்வேறு துன்பங்கள் துயரங்கள் அனைத்தையும் தைரியத்துடனும் விசுவாசத்துடனும் எதிர்நோக்கிப் பயணிப்போம். துன்புறுதல் மற்றும் பலியாதல் எமது பணியின் மிக முக்கிய பண்பாகும். அப்போது நாம் இறை வல்லமையால் பலம் வாய்ந்த கிறிஸ்தவனாக மாற்றப்படுவோம். அவ்வாறு எமது வாழ்வில் நாம்

துன்பங்களை சகித்து, இறை சித்தத்துக்கு அமைய செயற்பட உறுதிகொள்வோம்.

**செயற்பாடு**

01. ஏசாயா நூலின் 42:1-4 இல் காணப்படும் துன்புறும் பணியாளனின் பண்புகள் நான்கு எழுதுக.

02. கீழே தரப்பட்டுள்ளவர்கள் பற்றிய தகவல்களைத் தேடி, அவர்களின் வாழ்வில் நாம் பெறக்கூடிய பண்புகள் இவ்விரண்டு எழுதுக.

நெல்சன் மண்டேலா



தந்தை மைக்கல் றொட்றிகோ





இலவச விநியோகத்திற்காக